# Nineteenth Century Orthodox Education System

**Dr. G. Vijayakumari**
*Assistant Professor, Akharchand Malmal Jain College*
*Meenambakkam, Chennai*

**Abstract**
*In the early nineteenth century, teacher-pupil education was taught. Renowned poets like Accountant, Vidhuwan, Mahavidhuwan, Kavirayar, Navalar etc. taught traditional education system. School system, school teacher, school writing system, memorization system, school institutions, educational learning environment and school curriculum are briefly defined below as how the school curriculum functioned in traditional education.*
***Keywords:*** *Pupil, Traditional,Memorization, Environment, Curriculum, Functioned*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358391

**References**
1. My History - U.V. Saminathayar
2. Mahavithuvan Meenakshi Sundaram Pillai Sarithram U. Ve Saminathayar (Two Volumes)
3. History of Arumukha Novelist - Vy. The six-faced child
4. History of Gopala Krishna Bharatiyar -U.V. Saminathayar
5. Biography of Ramalinga Adigar - Uran Adigar
6. Educational Development – B.K. Venugopalapillai
7. Thiagarasa Chettiar Biography U. .Way. Saminathayar
8. Order of Tamil Scholars - K.A. Ramasamy Pillai

# பத்தொன்பதாம் நூற்றாண்டு மரபுவழிக் கல்வி முறை

***முனைவர் ஞா. விஜயகுமாரி***
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி
மீனம்பாக்கம் சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆசிரியர் மாணவர் வழிக் கல்விமுறை கற்பிக்கப்பட்டது. கணக்காயர், வித்துவான், மகாவித்துவான், கவிராயர், நாவலர் முதலான பேர்பெற்ற புலவர்கள் மரபுவழிக் கல்விமுறையைப் பயிற்றுவித்தனர். பாடசாலை முறை, திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர், திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதிய முறை, மனப்பாடம் செய்தல் முறை, திண்ணைப் பள்ளிக்கூட நிறுவனங்கள், கல்வி கற்கும் சூழல் இடம் திண்ணைப் பள்ளிக்கூடப் பாடத்திட்டம் ஆகியவை மரபுவழிக் கல்வியில் எந்த முறையில் செயல்பட்டது என்பதைச் சுருக்கமாகக் கீழே வரையறுக்கப்பட்டுள்ளன.*

***ஆய்வுக் கருச்சொற்கள்:*** *கற்பித்தல் முறை, திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதிய முறை, நிறுவனங்கள், கல்வி கற்கும் சூழல் இடம், பாடத்திட்டம், மனப்பாடம்(நெட்டுரு), குருகுலம், கணக்காயர், வித்துவான், மகாவித்துவான், கவிராயர், நாவலர், அரிச்சுவடி, நிகண்டு, ஆத்திசூடி*

தமிழ்ச் சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தைய கல்வி வரலாற்றுக்கான சான்றுகள், இலக்கணம், இலக்கியம், உரைகள் சார்ந்த தரவுகள் மூலம் ஓரளவு புலப்படுகின்றன. பண்டைக் கல்வி முறையில் மடங்கள், கோயில்கள், குருகுலம், வீட்டுத் திண்ணைகள், புலவர்களின் வீடு முதலிய இடங்களில் இலக்கணங்கள், இலக்கியங்கள், புராணங்கள், நிண்டுகள், சதகங்கள், ஆத்திசூடி முதலியவை கற்றுத்தரப்பட்டன. இவற்றுடன் சோதிடம், கணிதம், மருத்துவம் முதலியனவும் கற்பிக்கப்பட்டன.

கல்விமுறை பெரும்பாலும் மனப்பாடக் கல்வி முறையாகவே நிலவி வந்தது.இந்த முறையில் போதக ஆசிரியர் சொல்ல, மாணவர்கள் காதால் கேட்டு அவற்றை மனனம் செய்து கல்வி சுற்றனர். ஓலைச்சுவடிகளே எழுதும் சாதனமாக இருந்தமையால் அவற்றில் எழுதுதலின் சிரமத்தால் மனனம் செய்யும் நிலையே எளிதாக இருந்தது.

## முன்னுரை

தமிழ்ச் சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தைய கல்வி வரலாற்றுக்கான சான்றுகள், இலக்கணம், இலக்கியம், உரைகள் சார்ந்த தரவுகள் மூலம் ஓரளவு புலப்படுகின்றன. பண்டைக் கல்வி முறையில் மடங்கள், கோயில்கள், குருகுலம், வீட்டுத் திண்ணைகள், புலவர்களின் வீடு முதலிய இடங்களில் இலக்கணங்கள், இலக்கியங்கள், புராணங்கள், நிகண்டுகள், சதகங்கள், ஆத்திசூடி முதலியவை கற்றுத்தரப்பட்டன. இவற்றுடன் சோதிடம், கணிதம், மருத்துவம் முதலியனவும் கற்பிக்கப்பட்டன.

கல்விமுறை பெரும்பாலும் மனப்பாடக் கல்வி முறையாகவே நிலவி வந்தது. இந்த முறையில் போதக ஆசிரியர் சொல்ல, மாணவர்கள் காதால் கேட்டு அவற்றை மனனம் செய்து கல்வி சுற்றனர். ஓலைச்சுவடிகளே எழுதும் சாதனமாக இருந்தமையால் அவற்றில் எழுதுதலின் சிரமத்தால் மனனம் செய்யும் நிலையே எளிதாக இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திண்ணைப் பள்ளியில் படித்தல், புலவர்களிடம் தனி நிலையில் கற்றல் முதலிய கல்வி முறைகள் வழக்கில் இருந்துள்ளன. இந்தப் பள்ளிகளில் ஆசிரியர்கள் தமக்குத் தெரிந்தவற்றையும் தொடக்கநிலையில் கற்க வேண்டியவற்றையும் கற்பித்தனர். இதைத்தான் கற்பிக்க வேண்டும் என்ற எந்த வரையறையும் இல்லாத சூழலில் அரிச்சுவடி, நிகண்டு, ஆத்திசூடி முதலியவை இவ்வாறு கற்பிக்கப்பட்டவை. மரபு வழிக் கல்வி முறை பற்றி இவ்வாய்வுக் கட்டுரையின் ஆராயப்பட்டுள்ளது.

**மரபுவழிக் கல்வி முறை**

ஆசிரியர் மாணவர் வழிக் கல்விமுறை, கணக்காயர், வித்துவான், மகாவித்துவான், கவிராயர், நாவலர் முதலான பேர்பெற்ற புலவர்கள் மரபுவழிக் கல்விமுறையைப் பயிற்றுவித்தனர்.

**பாடசாலை முறை**

கிராமங்கள் தோறும் சிறு பாடசாலைகள் இருந்ததை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்க முடிகிறது. 1.பெரிய வித்துவான்கள் வீட்டிலும், 2.புலவர்கள் வீட்டுத் திண்ணையிலும் பாடம் நடைபெற்றன. மேலும் கோயில் மடங்களில் பாடசாலைகள் இருந்தன என்ற குறிப்பு புலப்படுகிறது.

**திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்**

திண்ணைப் பள்ளிகளில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்குக் கணக்காயர் என்று பெயர். புலவர்கள், வித்துவான்கள், கவிராயர்கள், உபாத்தியாயர், வலர்கள், மகாவித்துவான்கள், புலவர்கள் முதலானோர்கள் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்களாக இருந்தனர். கணக்காயர் துணையாகச் சட்டாம் பிள்ளை என்னும் தலைமாணவர் திண்ணைப் பள்ளியில் இருப்பார்.

**திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதிய முறை**

குழந்தைகள் தரையில் மணலைப் பரப்பிக் கை விரலினால் எழுதினர். ஒலி வடித்துடன் வரி வடிவத்தையும் கற்றுக் கொடுப்பார்கள். மாணவர்கள் எழுதும்போது தாம் எழுதும் எழுத்தின் ஒலியை உரத்துச் சொல்லிக் கொண்டே எழுதுவார்கள். பிறகு ஏடுகளில் எழுத்தாணியால் எழுதிப் பழகுவார்கள்.

**மனப்பாடம் செய்தல் முறை**

எழுத்துகளைக் கற்ற சிறுவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவற்றை மனப்பாடம் செய்வார்கள். வாய்பாடு முதலியவற்றை நெட்டுரு (மனப்பாடம்) செய்வார்கள்.-சிறு நூல்களை மனப்பாடம் செய்த பிறகு, திவாகரம், சூடமணி முதலான நிகண்டுகளையும் நன்னூல், சின்னூல் முதலிய இலக்கண நூல்களையும் நெட்டுருச் செய்வார்கள், -கணக்காயரிடம் பொருள் அறியாமல் செய்யுள்களை மனப்பாடம் செய்து காட்டுவார்கள்.

தகுந்த புலவரிடம் சென்று அவர்களிடம் தாம் மனப்பாடம் செய்த நூல்களுக்கு உரைகேட்பர். மனப்பாடம் செய்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, சதகம், நிகண்டு, நன்னூல் முதலியவற்றிற்குப் பொருள் கேட்டுக் கற்பர். மனப்பாடம் செய்த சிறிய நூல்களுக்குத் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுப் பொருள் அறிந்த மாணவர்கள் வேறு பிரபந்த நூல்களைக் கற்பர்.காரிகை முதலிய இலக்கண நூல்களையும் பாடங்கேட்பர். திருக்குறள், கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பெரிய நூல்களையும் மனப்பாடம் செய்வார்கள். பின்னர் செய்யுள்

இயற்றவும் கவிபாடவும் முயற்சி செய்து வல்லவர்களாவர்.

## திண்ணைப் பள்ளிக்கூட நிறுவனங்கள்

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மடங்கள் நிறுவனமாகச் செயல்பட்டு வந்தன. திருவாவடுதுறை மடம், தருமபுர மடம், திருப்பனந்தாள் மடம், காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், மதுரை திருஞானசம்பந்தர் மடம், திருநெல்வேலி செங்கோல் மடம், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, மயிலம் முதலிய ஊர்களில் இருந்த மடங்கள் கல்வி நிறுவனங்களாகச் செயல்பட்டன. இம்மடங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், அதற்கு முந்திய நூற்றாண்டுகளிலும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு நிறுவனங்கள் மூலம் கல்வியைக் கற்பித்தனர். திண்ணைப் பள்ளியில் பாடம் கற்பித்த முறை, பாடசாலை முறை, மனப்பாடக் கல்வி முறை, நிறுவனங்களில் ஆசிரியர்களின் செயல்பாடுகள் பற்றிச் சுருக்கமாக மேலே கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆய்வில் மரபுசார் கல்வி முறைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எப்படிச் செயல்பட்டன என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## கல்வி கற்பிக்கப்படும் முறை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குருகுலக் கல்வி கற்றுத் தரப்பட்டது. குருகுலக் கல்வியானது மாணவர்கள், குருவின் வீட்டில் 12ஆண்டுகள் தங்கிப் படிப்பார்கள். குருவுக்குத் தேவையான வேலைகளைச் செய்வார்கள். குருவின் வீட்டில் தங்கிக் கல்வியை எப்படிக் கற்றார்கள் என்ற குறிப்பு உ.வே.சா.வின் என் சரித்திரத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

உ.வே.சா.வின் தந்தை வேங்கடசுப்பையர் (வேங்கடச்சுப்பிரமணிய ஐயர்) தன் உறவுக்காரர் கிருஷ்ணையரிடம் குருகுல முறையில் அவர் வீட்டில் தங்கி 12ஆண்டுகள் சங்கீதம் பயின்றார். அவருக்குப் பல வேலைகளை ஏவுவார். தினந்தோறும் தம்முடைய ஆசிரியருக்கு என் தந்தை வஸ்திரம் துவைத்துப் போடுவார், வெந்நீர் வைத்துக் கொடுப்பார், தம்முடைய ஆசிரியர் குதிரையில் ஏறிச் செல்லும்போது சில சமயங்களில் செல்வதுண்டாம் (சாமிநாதையர்: 2004: 29, 30) என்று குருகுலக் கல்விமுறையில் சங்கீதம் பயின்றதை விளக்குகின்றனர்.

கணக்காயரிடத்தில் கற்கும் பாடசாலைக் கல்வி. புலவர்களிடத்தில் கற்கும் உயர்தரக் கல்வி என்பன. முதல் முதலாகச் சிறுவர்கள் கணக்காயரிடத்தில் சென்று கிராமப் பாடசாலையாகிய திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வார்கள். பிறகு நீதி நூல்களையும் இலக்கணச் சூத்திரங்களையும், நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களையும் மனப்பாடம் செய்வார்கள். இவற்றுடன் இவர்கள் பாடசாலைப் படிப்பு முடிந்துவிடும். பிறகு, இவர்கள் புலவர்களிடம் சென்று இலக்கண இலக்கிய நூல்களைப் பாடங்கேட்டுப் பொருள் உணர்ந்து கொள்வார்கள். காரிகை கற்றுக் கவிபாடவும் பழகிக் கொள்வார்கள் (வேங்கடசாமி: 2004: 235)

1. புலவர்களிடம் சென்று கல்வி கற்றல்,
2. மனப்பாடம் செய்தல் முறை,
3. பாடங்கேட்டுப் பொருள் உணர்ந்த முறை

பாடசாலைகளில் மாணவர்கள் படிக்கும் போது நிகண்டு, ஆத்திசூடி ஆகிய நூல்களை இசையோடு தான் பாடினார்கள் என்பதைப் பின்வரும் குறிப்பு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

காலையில் கடவுளை வணங்கிப் பாடங்களைப் படிக்கத் தொடங்குவர். ஒருவர் முதலில் சொல்லப் பிறகு மற்றவர்கள் சொல்லத் தொடங்குவர். அப்போது அனா, ஆவன்னா, இனா, ஈயன்னா என்ற வரிகள் தொடர்ந்து கேட்டும் சொல்லும் போதே மாணவர்கள் மணலில் எழுத வேண்டும் ஆசிரியர் படிக்க மாணவர்கள் இசையோடு பாடுவார்கள் (பரமசிவானந்தம்: 1991:51)

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் புலவர்கள், வித்துவான்கள், நாவலர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு மனப்பாடக் கல்வியை ஆர்வத்துடன் தமக்குத் தெரிந்தவற்றைக் கற்பித்து வந்திருக்கிறார்கள் என்பதை,

ஆசிரியர் வந்ததும் பாடம் கேட்பார். அதாவது முந்திய நாள் மனப்பாடம் பண்ணிக்கொண்டு வரச்சொல்லியிருந்த பாடங்களை மாணவர் ஒப்பிக்க வேண்டும் திண்ணைப் பள்ளிப் படிப்பு என்பதே பாட்டுகளையும் வாய்பாடுகளையும் மனப்பாடம் செய்வதுதான் அது என்றைக்காவது ஆசிரியருக்கு உற்சாகம் நிரம்பி விட்டால் சிறந்த கவிதைகளின் நயத்தை இனிக்க இனிக்கச் சொல்வதில் தம்மை மறப்பார். மாணவர்களும் தம்மை மறந்து அனுபவிக்கும் பாடச்செய்வார் (சாலை இளந்திரையன்: 1966: 65).

பிரபந்தம், சதகம், நன்னூல், நிகண்டு, மாலைகள் முதலிய செய்யுள் நூல்களை அப்படியே மனப்பாடம் செய்திருக்கிறார்கள், அதற்குப் பொருள் புரிந்து கொண்டு மாணவர்கள் செய்யுளைப் படிப்பார்கள் என்ற குறிப்பு மீனாட்சி சுந்தரனார் தம்முடைய சரித்திரத்தில் குறிப்பிடுகிறார். இதனை, படித்த செய்யுட்களின் கருத்துகளை அமைத்து இனிமையாகப் பேசும் திறமையும் இவர்பாற் காணப்பட்டன. இவருடைய அறிவின் வளர்ச்சியை அறிந்த தந்தையார் மகிழ்ச்சியடைந்து மற்றப் பிள்ளைகளோடு படிக்கும் பாடங்களையன்றிப் பிரபந்தங்களையும் எளிய நடையாகவுள்ள சதகங்கள், மாலைகள் முதலியவற்றையும் வீட்டில் மனப்பாடம் பண்ணுவித்துப் பொருளும் கூறிவந்தார். அன்றியும் நன்னூல் முதலிய இலக்கண நூல்களின், மூலப்பாடங்களையும் மனப்பாடம் பண்ணும்படி செய்வித்து வந்தார். ஒய்வு நேரங்களில் இலக்கணக் கருத்துகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிவுறுத்தினர். இவர் அவ்வாறு கற்ற பின்பு படித்த பிரபந்தங்கள் முதலியவற்றிற்கும் நைடதம் முதலிய சிறு காப்பியங்களுக்கும் ஏனைய நூல்களுக்கு மற்றவர்களோடு சேர்ந்து பொருள் கேட்பவராயினர் (சாமிநாதையர்: 1938:9-10)

மேலும் கல்வி கற்கும் முறை இரண்டு முறையில் கற்பிக்கப்பட்டது.

1. பாடம் படித்தல்
2. எழுதிப் பழகுதல்

பிள்ளைகளுக்கு மணல்தான் கரும்பலகை இடத்தைப் பெற்றிருந்தது பனையோலை ஏயடுதான் புத்தகம், விரலும் எழுத்தாணியுமே எழுதுகோல் இடத்தைப் பெற்றிருந்தன. ஆசிரியர் முதலில் பிள்ளையின் ஆள்காட்டி விரலைப் பிடித்து தமிழின் வரிவடிவத்தை எழுதிக் காட்டுவார். பிறகு அவர் சொல்லியபடி தமிழ் நெடுங்கணக்கைத் தவறின்றி உச்சரிக்க வேண்டும். தமிழின் ஒலிவடிவை நன்றாக அறிந்தபின்தான், வரிவடிவை (அரிச்சுவடியை) ஆசிரியர் மாணவர்களுக்கு எழுதிக் காட்டுவார். அக்காலத்தில் கரும்பலகை இல்லாமல் அவர்கள் மணலிலே ஆள்காட்டி விரலைப் பயன்படுத்தி கல்வி கற்று இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுின் தொடக்கத்தில் மரபுவழிக் கல்வி முறை எந்த நிலையில் செயல்பட்டது என்று அறிஞர்கள் கூறிய கருத்துகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. தமிழரின் மரபுவழிக் கல்வியின் சிறப்பை ஜான் மர்டாக் தம்முடைய ஆங்கில நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

When the Tamil alphabet has been acquired. The Attisudi of Avvaiyar is next taught.... The Ulakaniti, konrai venthan, muthurai etc are next studied; work like Arapalisura, satakam, manavala Narayana satakam, The kural, and Naladiar are read by more advanced scholars...... Letter writing is taught; as in&vitation to marriages, Letter to villege affairs, bonds etc.. (Murdoch's Catahogae) (John murdochs: 1868)

படிப்பில் திறமை மிக்க மாணவர் சட்டாம் பிள்ளை என அழைக்கப்பட்டார். ஆசிரியர் இல்லாத நேரங்களில் சட்டாம்பிள்ளை மாணவர் ஆசிரியர் போல இருந்து பாடம் நடத்துவதும் மாணவர்களைக் கண்டிப்பதும் வழக்கமாக அக்காலக் கல்வி முறையில் இருந்திருக்கிறது.

### கல்வி கற்கும் சூழல் இடம்

வீட்டுத் திண்ணையில்தான் நடைபெறும். குழந்தைகள் ஐந்து கிண்ணைப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் உபாத்தியாயர் வயதில் இருந்தே பள்ளிக்கூடம் வருவார்கள். படிப்பை முடிப்பதற்கான வயது வரம்பு எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது. மேலும், ஆங்கில நூலில்

அறிஞர் தாமஸ் மன்றோவின் ஆணைப்படி நடத்தப்பட்ட ஆய்வில் பதினைந்து வயது வரை படித்து நின்றுவிடுவதைப் பற்றிக் கூறப்படுகிறது.

- ஐந்து வயது உள்ள ஒருவனுக்கு ஆத்திசூடி முதலான நூல்களையும் கற்றுத் தந்திருக்கிறார்கள், நன்னூல் இலக்கணம் ஆறு வயதில் இருந்தே கற்றுத்தரப்படுகிறது. அவற்றைக் கற்பதினால் மொழியோடு கூடிய அறிவும் பெறப்படுகிறது.
- முதல் வயதினர்க்குப் புராணங்கள், இதிகாசங்கள், சதகங்கள் ஆகியவை கற்றுக் கொடுத் திருக்கிறார்கள். இவை எல்லாம் வாய்மொழி மரபாகத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கற்றுத்தரப்பட்டன. பிறகு முதன்முதலாகப் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு மணல் பரப்பி அதில் விரலால் எழுதப் பழக்குவர்.

கிராமத்துப் பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்லுவார்கள். அந்தப் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் பயிலும் முறையே வேறு (சாமிநாதையர்: **1950:77**). என்று உ.வே. சாமிநாதையர் என் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார். கிராமத்துப் பள்ளிக்கூடங்கள் யாவும் உயர்சாதி வகுப்பினரான பிராமணர்களுக்கு மட்டும் தொடக்க காலத்தில் உபாத்தியாயர் வீட்டில் நடைபெறும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

### பள்ளிக்கூடம் நேரம்

உபாத்தியாயர் வீட்டில் எப்படிப் பாடம் கற்பிக்கப்பட்டது. அவர்கள் வரும் நேரம் குறித்தும் அவர்கள் என்னென்ன வேலைகள் உபாத்தியாயருக்குச் செய்தார்கள் என்றும் உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுகிறார். இதனை, பிள்ளைகள் யாவரும் விடியற் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து சுவடித்தூக்கோடு பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட வேண்டும். சுவடிகளை எல்லாம் வைத்துத் தூக்கி செல்லும் கயிறுகள் சேர்தது பலகை தூக்கு என்று பெயர். தூக்கு ஒருவகை உரியைப் போல இருக்கும். தூக்கைப் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் மாட்டி விட்டுப் பிள்ளைகள் முறைப்படி இருந்து முதல் நாள் நடந்த பாடங்களைப் பாராமல் ஒப்பிக்கை வேண்டும். அதற்கு முறை சொல்லுதல் என்று பெயர். அப்பொழுது உபாத்தியாயர் வீட்டிற்குள் படித்துக் கொண்டிருப்பார். அவரை எதிர்பாராமல் பிள்ளைகள் பாடங்களை முறை சொல்ல வேண்டும். அதை அவர் உள்ளே இருந்த படியே கவனிப்பார். பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உபாத்தியாயரது வீட்டுத் திண்ணையிலேயே இருக்கும் (சாமிநாதையர்: **1950: 78**)..

பள்ளிக்கு வரும் குழந்தைகள் தங்கள் வஸ்திரங்களில் மணலை எடுத்துக்கொண்டு மூஷிகவாகனம், ஸரஸ்வதி ஸ்தோத்திரம் முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள், பின்பு முன்பிருந்த பழைய மணலை அகற்றிவிட்டுப் புதிய மணலைப் பரப்புவார்கள். எழுது வதற்குரியவர்கள் இதில் எழுதுவார்கள். மற்றவர்கள் தங்கள் பாடங்களைப் படிப்பார்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர்.

1. கெட்டிக்காரன்
2. பலசாலி

இருவரையும் உபாத்தியாயர் சட்டாம் பிள்ளையாக நியமிப்பர். அவன் புத்திசாலியாக இல்லாவிட்டாலும் பலசாலியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

மாணவர்களில் பழையவர்கள், புதியவர்களுக்குக் கற்பிப்பதும் பள்ளிக்கூட வழக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பன்னிரண்டு மணிக்குமேல் மத்தியான சாப்பாட்டிற்குப் பிள்ளைகள் வீட்டிற்குச் செல்வார்கள். பிறகு மூன்று மணிக்கு மீண்டும் பாடம் தொடங்கப்படும். இரவு ஏழு மணி வரையில் கூடப் பள்ளிக்கூடம் நடைபெறுவதுண்டு. பள்ளிக்கூடத்திற்கு நேரங்கள் ஒதுக்காமல் நடத்தினார்கள் என்ற குறிப்பும் காணப்படுகிறது. பாடங்கள் நடத்திய உடனே மறுநாள் ஞாபகம் வைத்து அவற்றைக் கற்பிக்கப் பிள்ளைகளை வீட்டிற்கு அனுப்பும்போது அவர்களது ஞபாக சக்தியை விருத்தி செய்விப்பதற்காக

ஒவ்வொருவருக்கும் பூ. மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொல்ல வேண்டும். மறந்து போய்விடுமோ என்ற பயத்தால் சில பிள்ளைகள் வீடு சென்றவுடன் தமக்கு உபாத்தியாயர் சொன்ன பொருள்களின் பெயர்களைத் தம் தாய் தகப்பனாரிடம் சொல்லிவிடுவார்கள். மறுநாள் விடியற் காலையில் அவர்களிடம் அவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்து சொல்லுவார்கள் *(சாமி நாதையர்: **1950: 79**).*

பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால் *(சாமிநாதையர்: **1950: 79**)*

அதாவது பள்ளிக்கூடங்கள் வீட்டில் நடைபெற்றதால் நேரம் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை சாமிநாதையர் கருத்தின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

உபாத்தியாயர் ஒவ்வொரு ஏடாகப் படித்து முடிக்க அது மாணவரிடம் சேர்ந்துகொண்டே வரும். அந்தப் பாடம் முடிந்த பின்பு அதை முழுமையாக ஒப்புவிக்க வேண்டும். அவ்வாறு ஒப்புவித்த பிறகு அந்த ஏடுகளை ஒன்றாகக் கட்டி அது எழுதப்பட்ட தேதியையும் குறித்து இறுதியில் உபாத்தியாயரின் கையொப்பமும் இடம்பெறும் இவ்வாறு உபாத்தியாயர் வீட்டில் பாடம் நடத்தும் முறை அமைந்திருந்தமையை அறிந்து கொள்ளமுடிகிறது.

ஆறு மணிக்குமேல் பிள்ளைகள் எல்லாம் வாய்க்கால் அல்லது குளம் முதலிய இடங்களுக்குப் போய்த் தந்தச் சுத்தி செய்து கொண்டு தங்கள் குலத்திற்கேற்ற சின்னங்களைத் தரித்துக்கொண்டு ஸந்திய வந்தனமோ வேறு அனுஷ்டானமோ செய்வார்கள். பிறகு தங்கள் வஸ்திரங்களில் மணலை எடுத்துக்கொண்டு மூஷிகவாகனம், ஸரஸ்வதி ஸ்தோத்திரம் முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே பள்ளிக் கூடத்திற்கு வருவார்கள். ஒன்பது மணிக்குப் பிள்ளைகளைப் பழையது (பழைய அமுது) சாப்பிட விடுவது வழக்கம். பன்னிரண்டு மணிக்குமேல் மத்தியானச் சாப்பாட்டிற்குப் பிள்ளைகள் வீட்டுக்குச் செல்வார்கள் பிறகு மூன்று மணிக்கு மீண்டும் பாடம் தொடங்கப்படும். இரவு ஏழு மணி வரையிற்கூடப் பள்ளிகூடம் நடைபெறுவதுண்டு *(சாமிநாதையர்: **1950: 79**)*

## திண்ணைப் பள்ளிக்கூடப் பாடத்திட்டம்

இன்றைய கல்வி முறையில் உள்ள வகுப்புப் பிரிவுகளும், வகுப்புக்கேற்ற பாடத் திட்ட முறையும் அன்றைய கல்வி முறையில் இருந்திருக்கவில்லை. அரிச்சுவடி, எண்சுவடி ஆகியவற்றைக் கற்கத் தொடங்கிய சில நாட்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய நூல்களைப் படிப்பார்கள். இதனைத் தொடர்ந்து கலம்பகம், மாலை, தூது, பிள்ளைத்தமிழ் முதலான நூல்களையும் அப்படியே படித்து மனப்பாடம் செய்வார்கள். இப்பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் எந்த நூலுக்கும் பொருள் சொல்லமாட்டார்கள். மாறாக திருப்புகழ் படிக்கத் தொடங்கிவிட்டால் அவன் பெரிய வகுப்பு மாணவன் என்று குறிப்பிடுவார்கள். அங்குப் படிக்கும் மாணவர்களைப் பொதுவாகக் கீழ்நிலை, மேல்நிலை என இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கொண்டு ஆசிரியர் பாடம் நடத்தியிருக்கிறார். அங்குப் படித்தல் எழுதுதல் அடிப்படைக் கணிதம் ஆகியவை தாய்மொழியில் கற்பிக்கப் பெற்றன.

வாசிப்பு, எழுதுதல், கணிதம் இப்பாடங்கள் மட்டுமே திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டன *(சிவராமக் கிருஷ்ணன்: **1960: 7**).*

மேலும் பாடத்திட்ட முறையை உ.வே.சா எழுதிய நல்லுரைக் கோவை நூலில், அக்காலத்துப் பாடமுறைக்கும் இருபதாம் நூற்றாண்டுப் பாட முறைக்கும் பெரிய வேறுபாடு உண்டு. அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் ஆகியவை பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இளங்குழந்தைகளுக்கு ஞபாக சக்தியை விருத்தி

பண்ணுவதற்கு உபாத்தியாயர்கள் சில க்குப் பின்பற்றுகிறார் (சாய்ந்தையர். முறைகளை மாணவர்களுக்குப் 1941: 144).

வடமொழியிலும் ரூபாவதாரம் முதலிய நூல்களுக்கு இத்தகைய செய்யுட்கள் உண்டு அவற்றை ஸ்ரீ சுலோகங்கள் என்று கூறுவார்கள் (ஆறுமுக நாவலர்: 1968: 80). என்று மனப்பாடம் செய்வதற்கு எதுகை, மோனைகளில் செய்யுள் இலக்கணம் இருந்தால் மாணவர்களுக்கு எளிமையாகவும் இருக்கும் என்று குறிப்பிடுகிறார்.

ஆறுமுக நாவலர் தம்மிடம் கல்வி பயில வரும் மாணவர்களின் வசதியைக் கருதி இரவு பகலாகப் பாடங்களைப் போதித்து வந்தார். பொருளுதவி எதுவும் பெறாமல் சில ஆண்டுகள் தமிழ்க் கல்விக்காக உழைத்து வந்தார். தமிழ் நூல்களில் தலைசிறந்த திருக்குறளையும் நன்னூல், நிகண்டு முதலிய இலக்கண நூல்களையும், பெரிய புராணம் முதலிய பக்தி நூல்களையும் தம்பால் பயின்ற மாணவர்களுக்கு விளக்கமாகக் கற்பித்து வந்தார். 1845இல் நாவலர் இலவசமாகக் கற்றுக்கொடுக்கும் தமிழ்ப்பணியை மேற்கொண்டார்.

## முடிவுரை

திண்ணைப் பள்ளிக்கூட மரபில் இலக்கண அறிவும் தெளிவும் இருந்தாலும் மனப்பாடம் அளவில் இருந்தார்கள். 1811க்கு பிறகு நூல் வடிவில் புத்தகம் வெளியான பின்பு இலக்கண மொழி அறிவு புலப்பட்டது என்று குறிப்பிடமுடிகிறது..இவ்வாய்வின் மூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு கல்வி முறையை. அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களின் வாழ்க்கை வரலாற்று ல்கள் ஆதாரமாக .அமைந்தன. கல்வி முறை வரையரையை தெரிந்துக் கொள்ள முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கல்வி முறையைத் தெரிந்து கொள்வதற்குப் பின்வரும் சான்று நூல்கள்

1. என் சரித்திரம் - உ.வே.சாமிநாதையர்
2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் உ.வே.சாமிநாதையர் (இரண்டு தொகுதிகள்)
3. ஆறுமுக நாவலர் சரித்திரம் - வை. ஆறுமுகப் பிள்ளை
4. கோபால கிருஷ்ண பாரதியார் சரித்திரம் -உ.வே.சாமிநாதையர்
5. இராமலிங்க அடிகளார் வாழ்க்கை வரலாறு -ஊரன் அடிகள்
6. கல்வி வளர்த்த வள்ளல்கள் - பி.க. வேணுகோபலப்பிள்ளை
7. தியாகராச செட்டியார் வாழ்க்கை வரலாறு உ. வே. சாமிநாதையர்
8. தமிழ்ப் புலவர் வரிசை - க.அ. இராமசாமிப் பிள்ளை